# தொழுகை தயம்மும்

## தயம்மும்

தண்ணீர் கிடைக்காத போது, அல்லது நோயினால் பயன்படுத்த முடியாத போது உளுவுக்கும் குளிப்புக்கும் மாற்றுப்பரிகாரமே தயம்மும் ஆகும்.

فَلَمْ تَجِدُواْ مَاء فَتَيَمَّمُواْ صَعِيدًا طَيِّبًا فَامْسَحُواْ بِوُجُوهِكُمْ وَأَيْدِيكُم مِّنْهُ

உங்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லையென்றால் தூய்மையான மண்ணைத் தொட்டு அதில் உங்கள் முகங்களையும், கைகளையும் தடவி (தயம்மும் செய்து) கொள்ளுங்கள்

**(குர்ஆன் 5:6)**

“பூமி முழுவதும் வணங்கும் இடமாகவும் அதனுடைய மண் தூய்மைப்படுத்தக்கூடிய பொருளாகவும் ஆக்கப்பட்டுள்ளது” என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள்.

**(ஆதாரம்: புகாரி முஸ்லிம்)**

தயம்முத்துடைய ஃபர்ளை செய்கிறேன் என நிய்யத்து வைத்துக்கொண்டு

1. இரு கைகளையும் மண்ணில் ஒரு முறை அடித்து பிறகு கைகளில் படிந்துள்ள மண்ணை ஊதிவிட்டு முகத்தில் தடவிக்கொள்ள வேண்டும்.
2. பிறகு இடது உள்ளங்கையை வலது முன்னங்னையின் மேல்புறத்தில் ஆரம்பித்து கையை முலுமையாக தடவுதல் வலது உள்ளங்கையை இடது முன்னங்னையின் மேல்புறத்தில் ஆரம்பித்து கையை முலுமையாக தடவுதல். இதுவே தயம்மும் ஆகும்.

உளு செய்து அல்லது தயம்மும் செய்து தொழுகைக்கு தயாராகிவிட்டவர் கீழ்க்கண்டவைகள் நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அவற்றுள் எவையேனும் நிகழ்ந்துவிட்டால் உளு அல்லது தயம்மும் முறிந்து விடும். மறுபடியும் உளுவு, அல்லது தயம்மும் செய்ய வேண்டும்.

**அவை:**

1. மல ஜலம் கழித்தல்
2. பின் துவாரத்திலிருந்து காற்று வெளிப்படுதல்.
3. ஆழ்ந்த உறக்கம்.
4. இச்சை நீர்க்கசிவு ஏற்படுதல்
5. வேண்டுமென்றோ, இச்சையுடனோ மர்ம உறுப்பைத் தொடுதல்,திறையின்றி தொடுதல்
6. இவையன்றி ஒட்டக இறைச்சியை சாப்பிட்டாலும் உளு முறியும் என்பதை ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் தெரிவிக்கின்றன.

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**
**BATHUSHA.COM**